REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 26உ திங்கள் (11—11—57) ★ வெளியூர்: ஐப்பசி 27உ செவ்வாய் (12—11—57) [இதழ் 128

நெல்லூரில் வெள்ளத்திற்கு 86 பேர் பலி!

விஜயவாடா, நவ. 9—

சூளூர்பேட்டைக்குத் தெற்கே 8 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டதாகவும், இதனுல் பல இலட்சம் பெறுமான பொருள் நஷ்டம் ஏற்பட்டது என்பதுடன், பெண்கள் குழந்தைகள் உட்பட 86 பேர்கள் பலியாயினர் என்றும் உத்தாராசுராமன் என்ற மக்கள்சபை உறுப்பினர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறுர்.

'தேசீய கௌரவத்தை துப்பாக்கி முனையால் காப்பாற்றிவிட முடியாது'

'தேவைப்படுவது சட்டமல்ல-சந்திப்பு'

'இந்தச் சட்டம் தீதானது--கொடுங்கோன்மைக்கு வழிகோலுவது'.

சட்டமன்றத்தில் அண்ணு விளக்கம்

சென்னை, நவ. 11—

தேசீய கௌரவத்தை அவமதிப்பதைத் தடுக்க என்றுகூறி, சென்னை சர்க்கார் கொண்டுவந்த மசோதா இன்று சட்டசபையில் விவாதிக்கப்பட்டது.

விவாதத்தில் பல கட்சியினரும், அண்ணு அவர்களும் கலந்து கொண்டனர்.

முடிவில் மசோதாமீது வாக்கெடுப்பு நடைபெற்றது.

ஆதரவாக 104 வாக்குகளும், எதிராக 13 வாக்குகளும் பதிவாயின.

மசோதாவை ஆதரித்து காங்கிரஸ், கம்யூனிஸ்டு, தேசீய ஜனநாயகக் காங்கிரஸ், சோஷலிஸ்டுக் கட்சியினரும், பார்வர்டு பிளாக் கட்சியினரும், மற்றும் சுயேச்சைகளான சட்டநாதக் கரையாளர், ஆதிமூலம் ஆகியோரும் வாக்களித்தனர்.

மசோதாவை எதிர்த்து நமது தி. மு. கழக உறுப்பினர்கள் 12 பேர்களும், சுயேச்சை உறுப்பினரான எஸ். பி. ஆதித்தனும் வாக்களித்தனர்.

அண்ணு அவர்கள், மசோதாவைக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இப்போது தேவைப்படுவதெல்லாம் பெரியாருக்கும்—காமராசருக்குமிடையே ஒரு சந்திப்பே தவிர சட்டம் அல்ல.

"இந்தச் சட்டம் தீதானது—தேவையற்றது — கொடுங்கோன்மைக்கு வழிகோலுவது—சர்வாதிகார நாடுகளில் நடைபெறுவது.

"தேசீய கௌரவத்தைத் துப்பாக்கி முனையால் காப்பாற்றிவிட முடியாது."

அண்ணு அவர்களின் பேச்சு முழுவிவரம் பின்னர் வெளிவரும்.

இன்று சட்டசபைக்கு முதன் மந்திரி காமராசர் வரவில்லை; மற்றும், மந்திரி திருமதி லூர்தம்மையார் அவர்களும் வரவில்லை.

'இந்தியை ஆட்சிமொழி ஆக்கும் திட்டத்தை ஒத்திவைக்கவும்'

'தென்னுட்டவர் கருத்துக்கு உரிய மதிப்புத் தருவீர்'

மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா கருத்து

பெங்களூர், நவ. 9—

"இந்தியை ஆட்சிமொழியாக்கும் விவகாரத்தில் தென்னிந்திய மக்களின் கருத்துக்கு உரிய மதிப்பளிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன்"

என்று, மைசூர் முதன் மந்திரி நிஜலிங்கப்பா அவர்கள், பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறுர்.

"தென்னுட்டவரில் பெருமளவினர், ஆட்சிமொழியாக இந்தியைக் கொண்டுவரும் திட்டத்தை ஒத்திவைக்கவேண்டுமெனக் கோரும்போது, திட்டத்திற்கு நாள் குறித்து அதனைத் திணிக்க முற்படுவது விரும்பத்தக்கதல்ல"

என்றும், அவர் கருத்தறிவித்துள்ளார்.

"இன்று தென்னுட்டவர் பலரும் இந்தியை ஆட்சிமொழியாக்குவதை ஒத்திவைக்க வேண்டும் என்றே கருத்தறிவித்துள்ளனர். இந்தக் கருத்திற்கு உரிய மதிப்புக் கிடைக்கவேண்டும்; ஒத்திவைக்கப்படுவதுதான் நல்லது."

கேர் கமிஷன் அறிக்கை பற்றி ஆராய மக்கள் சபைக் குழு சீக்கிரமே கூடப்போவது பற்றித் தெரிவிக்கப்பட்டபோது, அவர், 'நமது கருத்தினை உரிய காலத்தில் தெரிவித்துவிடுவோம்' என்று கூறியுள்ளார்.

"இந்தப் பிரச்சினை பலாது மனதையும் வாட்டிக்கொண்டிருப்பதை நாம் கவனித்தாக வேண்டும்"

என்றும், நிஜலிங்கப்பா கூறியிருக்கிறுர்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

அக்டோபர் 26-ம் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவு 6 புள்ளி உயர்ந்து 377 ஆகியது. அரிசி, மிளகாய், நெய் ஆகியவைகளின் விலை உயர்வே இந்த விலை ஏற்றத்துக்குக் காரணம்.

பஞ்சாப் இந்தி வெறியர் கிளர்ச்சி

மீண்டும் கண்டிக்கிறுர் பண்டிதர்

சந்திகர், நவ. 9—

பஞ்சாபில் இந்திக்கு ஆதிக்கம்கோரி நடைபெறும் கிளர்ச்சி அடிப்படையிலேயே தவறுனது என்று மீண்டும் பண்டித நேரு கண்டனம் தெரிவித்திருக்கிறுராம்!

'இந்தி ரட்ச சமிதி'யினர் கிளர்ச்சியில் கையாளும் முறைகளும் தவறுனவை என்றும் அவர் கண்டித்திருக்கிறுர்.

"பஞ்சாபின் மற்றொரு மொழியான உருது மொழியை பலரும் மறந்துவிட்டிருக்கிறுர்கள். இந்தி பஞ்சாபி இரண்டுடன் உருது மொழியையும் போதிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென பஞ்சாப் சர்க்காரைக் கேட்க உத்தேசித்துள்ளேன்"

(1-ம் கலம் பார்க்க)

(2-ம் பத்தியின் தொடர்ச்சி)

என்றும் பண்டிதர் கூறியிருக்கிறுர்.

பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர், 'இந்தியைக் காப்பாற்ற வேண்டும்' என்கிறுர்கள்; பஞ்சாபில் யார் இந்திக்கு எதிரிகள்—யாரிடமிருந்து அதனைக் காப்பாற்ற வேண்டுமென்கிறுர்கள் என்பதே எனக்குத் தெரியவில்லை' என்றும் அவர் கூறியிருக்கிறுர்.

இந்தியைத் திணிப்பதால் இதர மொழிபேசும் மக்களுக்கு இன்னல் பல ஏற்படும்

உண்மையை ஒப்புகிறுர் பண்டிதர்

ஆனுல் ஆட்சிமொழிப் பிரச்சினைபற்றி திட்டவட்டமாக ஏதும் கூறமாட்டாராம்

புதுடில்லி, நவ. 10—

"இந்தி பேசாத பகுதி மக்கள்மீது இந்தியைத் திணிப்பதானது தேவையில்லாத பல பிரச்சினைகளை உருவாக்கும் என்பதில் சந்தேகமே இல்லை" என்பதாக பண்டித நேரு கருத்தறிவித்திருக்கிறுராம்!

பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர் கூட்டத்தில் பேசிய அவர், இது, பிரச்சினையை அணுகுவதற்கான தனது சொந்தக் கருத்து என்றும், கேர் குழுவின் அறிக்கைபற்றி மக்கள் சபைக் கூட்டுக் குழுவினர் விவாதித்து முடிவு தெரிவிக்கும் முன்னர் தான் திட்டவட்டமாக எதும் தெரிவிப்பதற்கு இல்லை என்றும் கூறினுராம்!

"ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைக் கொண்டுவரும் மாற்றம், இந்தி பேசும் மக்களுக்கு, அகில இந்திய சர்வீசுகளுக்கு நடைபெறும் தேர்வுகள் முதலியவற்றில் நிச்சயம் அனுகூலமான நிலையை உண்டு பண்ணும்.

"உத்தியோகங்களுக்கு நடைபெறும் தேர்வில் இந்தியைக் கட்டாயபாடமாக்குவது, தங்களுக்குப் பெரும் பிரதிகூலமாய் அமையும் என இந்தி பேசாத மக்கள் அஞ்சுவது நியாயமானதே!

"எனவே, இந்தியைத் திணிப்பது என்பது கூடாது. பிரச்சினையை நட்புறவு—கூட்டுறவு நோக்கத்துடன் அணுக வேண்டும். இதை ஏற்கெனவே, காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் மூலம் தெரிவித்திருக்கிறது.

"எனவே, இந்தப் பிரச்சினைக்கு அனைவரும் ஒப்பக்கூடிய வகையில் பரிகாரம் தேடியாக வேண்டும். அப்போதுதான், ஏற்படக்கூடிய சந்தேகங்களையும், அச்சத்தையும் போக்க முடியும்"

என்றும் பண்டித நேரு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

2,000 அடி ஆழத்தில்!

1172 கோடி டன் நிலக்கரிப் படிவமாம்

புதுடில்லி, நவ. 7—

ஜாரியா நிலக்கரி வயல்களில் 2,000 அடி ஆழம் வரையில் 1172·7 கோடி டன் நிலக்கரிப் படிவு இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்!

1895-ம் வருடத்திலிருந்து 1951-ம் வருடம் வரை, ஜாரியா நிலக்கரி வயல்களிலிருந்து மொத்தம் 45 கோடி டன் நிலக்கரி எடுக்கப்பட்டிருக்கிறது.

'ஏற்றிவைத்த விளக்கு தி. மு. கழகம்-கொளுத்திவிட்ட பட்டாசு அல்ல'

'நமது அலுவல்களில் விடுதலை வேட்கையும் அரசியல் விழிப்பும் நிரம்பியிருக்கின்றன'

கழகம் துவங்கப்பட்ட இராபின்சன் பூங்காவில் அண்ணு விளக்கம்

சென்னை, நவ. 11—

"கொளுத்திவிட்ட பட்டாசுபோன்ற நிலையில் இன்று வேறு பல கட்சிகள் இருக்கலாம்; ஆனுல் தி. மு. கழகம், ஏற்றி வைத்த விளக்கைப்போல இன்றைய தினம் அரசியலில் விளங்கிவருகிறது.

"கொளுத்திவிட்ட பட்டாசுக்கும் ஏற்றிவிட்ட விளக்குக்கும் வித்தியாசமுண்டு; கொளுத்திவிட்ட பட்டாசு திடீரென பெரிய வெளிச்சத்துடன் மேலே எழும்பி வெடித்துவிட்டு அடங்கிவிடும்; அதன் பிறகு, வெடித்த அந்தப்பட்டாசு எங்கு விழுந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு விளக்கை எடுத்துக் கொண்டுபோய்தான் தேட வேண்டும். பட்டாசு தரும் வெளிச்சத்தைவிட விளக்கு வெளிச்சமே நிரந்தரமாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும்.

"ஏற்றிவிட்ட விளக்கைப்போல் தூண்டிவிடப்பட்ட அறிவு அரசியலில் தேவை."

—இவ்வாறு அண்ணு அவர்கள், நேற்று மாலை சென்னை இராபின்சன் பூங்கா திடலில், மூன்ருவது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில் நடந்த கே. எஸ். பாண்டியன் நினைவு விழாப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—11—57 திங்கள்

பணியும் பொறுப்பும்!

மக்களுக்காக, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு இயங்கும் மக்களாட்சியே சிறப்பான சனநாயகத்தின் அடிப்படையாகும். தூய சனநாயக வளர்ச்சிக்கு ஆக்கம் தேடுவது, மக்களின் விழிப்புணர்ச்சிதான் என்பதை தெளிவுபடைத்த சனநாயக அரசியல்வாதிகள் மறுக்கமாட்டார்கள்.

ஆனல் இன்று, சென்னை மாநில அரசாங்கத்தின் போக்கைத் தொடர்ந்து கவனிக்கும்போது, சனநாயகத்தைப் பாழ்படுத்தும் வகையிலேயே பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று கருத வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

மாநில உள்ளாட்சி மன்ற நிர்வாகத்தை மாற்றியமைக்கும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட 'வெள்ளை அறிக்கை' சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, 16 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஓர் ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளது. அந்த ஆய்வுக்குழு செயல்படும் முன்னரே, 'சென்னை கிராமப் பஞ்சாயத்துத் திருத்தச் சட்டம்' ஒன்று கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நிலையைச் சிந்தித்துப் பார்க்கும்போது, ஏற்கனவே அரசாங்கம் திட்டமிட்டு, ஒப்புக்காகவே சட்டமன்றத்தில் விவாதம் நடத்தி, ஆளும்கட்சிக்கு உள்ள பிருகத்தனமான—பெருவாரியான ஆதரவைக் கொண்டு துணிகரமாகச் செயலாற்ற ஈடுபட்டுள்ளதோ என்றுகூட எண்ண வேண்டியுள்ளது.

இந்த மனப்போக்கு கொண்ட — சனநாயகத்திற்கு மாறுபட்ட பணியில் ஈடுபடும் அரசாங்கத்திற்கு, உள்ளாட்சி சீரமைப்புப்பற்றி 'ஆய்வுக் குழு' தரும் கருத்து எந்த அளவுக்குப் பயனளிக்கும் என்ற சந்தேகமும் ஏற்படுகிறது. இருப்பினும், இந்த ஆய்வுக்குழு, தான் மேற்கொண்டுள்ள பொறுப்பைத் தட்டிக்கழிக்காமலும், தயங்காமலும் ஆழ்ந்து ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

உள்ளாட்சி மன்றங்கள் கலைக்கப்படுவதற்கும், மாற்றப்பட வேண்டியதற்கும் தக்க காரணங்கள் கூறப்படவில்லை. 'அவை நன்றாகவே பணியாற்றி வந்திருக்கின்றன' என்று அமைச்சர் கூறியதிலிருந்து, 'கலைக்கப்படுவதற்கான காரணத்தை வெளியிடுவதற்கில்லை' என்றே மக்கள் அறிய வேண்டும் என்று அவர் கருதினாலும், மக்கள் உணராமல் இருப்பார்கள் என்று எண்ணிவிட முடியாது.

உள்ளாட்சி மன்றங்களில் 'கட்சி அரசியல்' கூடாது என்ற பெருமைக்குரிய நிலையில் காங்கிரஸ் தலையிட்டும்கூட, தாங்கள் எதிர்பார்த்த பலன்—கனவு கண்ட ஆசை நிறைவேறவில்லையே என்பதுதான் இதற்கான உண்மைக் காரணம் என்பதை நாம் சொல்லாமலே மக்கள் உணர்வார்கள்.

இந்தியப் பேரரசின் பொறுப்பிலுள்ள தேசிய வளர்ச்சித் திட்டங்கள், சமுதாய நலத் திட்டங்கள் ஆகியவைகளுக்கு மக்களின் ஆதரவைத்தேட, உள்ளாட்சி மன்றங்களை மாற்றியமைக்க வேண்டும் என்பது, காரணத்தைக் கண்டுபிடிக்க ஈடுபட்டதின் ஒரு கூறாகவே உள்ளது.

உள்ளாட்சி மன்றங்கள் ஏற்கனவே பல ஆண்டுகளாக மக்களுக்கு நல்ல முறையில் பணியாற்றி வந்திருக்கின்றன.

திட்டங்கள் அவ்வப்போது உருவாக்கப்படுவன; திட்டங்களை மாற்றவும், குறைக்கவும், கைவிடவும் மத்திய அரசுக்கு உரிமை உண்டு. எனவே, இரண்டையும் இணைப்பது அவசியம் என்றோ, நியாயம் என்றோ கருதுவதற்கில்லை. மேலும், குறிப்பிட்ட இந்த இரண்டு திட்டங்கள்பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

இந்தியப் பேரரசின் இரண்டாவது பேராசைத் திட்டம் பணமில்லாத காரணத்தால், முக்கிய அடிப்படைத் திட்டங்கள்வரை நிறைவேற்றும் வாய்ப்பு உள்ளதா என்ற திண்டாட்டமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், அரசாங்கத்தின் போக்குக்கு நியாயம் காண வேண்டும் என்று, பதவியில் இருப்பவர்கள் முயன்று கற்பிக்கலாமே தவிர, உண்மையில் நியாயம் காணப்படவில்லை.

இந்த இணைப்பு, மாநில ஆட்சிக்கு உள்ள ஓரளவு அதிகாரத்திலும் டெல்லிக்கு இடமளிப்பதாகவும், தலையிட வாய்ப்பளிப்பதாகவும் கொண்டு செல்லும் என்பதை மக்கள் அறிவார்கள். மேலும், அதிகாரிகளின் விருப்பத்திற்கு மக்கள் பணிந்து செல்லவேண்டிய நிலையையும் அதிகரிக்கச் செய்யும்.

திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முக்கியப் பொறுப்புடன் இதில் ஈடுபடுத்தப்படும அதிகாரிகள், எந்த அளவுக்கு மற்றத் துறைகளில் மக்களுக்கு நன்மை செய்வார்கள் எனபது நாம் சொல்லாமலே நாட்டின் நல்லவர்கள் அறிவர்.

இப்போது கருதப்பட்டுள்ள மாற்றங்கள் பொருளாதார அடிப்படையிலும், அரசியல் அடிப்படையிலும் இல்லாதவை—நிபுணர்களின் கருத்தையும், அனுபவம் பெற்றவர்களையும் கொண்டு ஆராய்ந்து செய்யப்பட்டவை என்று கருதமுடியாத உருவில் உள்ளன.

மேலும், இந்த இருபதாம் நூற்றுண்டில்கூட, பல பிற்போக்குக் கோணங்களிலிருந்து சில முடிவுகள் 'வெள்ளை அறிக்கை'யில் காணப்படுகின்றன தலைவர் தேர்தல் மக்களால் நடத்தப்படும் இப்போதைய முறையை மாற்ற முனைந்துள்ளதும, இரகசிய வாக்கெடுப்பு முறைககு இடமளிக்காமல் இருப்பதும, மக்கள் விரும்பாத தலைவரை பதவியிலிருந்து நீக்க வழிகாண மறுப்பதும, பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாக அவசியமில்லாமல் நீடிப்பதும், மாவட்ட வளர்ச்சிக் குழுவிற்கு ஆலோசனை கூறும் அதிகாரத்தை மட்டும் அளிப்பதும் போதிய சான்றுகளாகும்.

இத்தனைக் குறைபாடுகளைக் கொண்ட இந்தச் சிக்கலை ஆய்வுக் குழு ஆய்ந்து, ஆராய்ந்து, மக்களின கருத்துக்களுக்கும, சனநாயகக் கோட்பாடுகளுக்கும், கால வேகத்திற்கும் ஏற்ற முறையில் மதிப்பளித்து, மேற்கொண்ட பணியைப் பொறுப்புடன் செய்யவேண்டும்.

அரசாங்கத்தின் போக்கு எப்படி இருந்தாலும், மக்கள் எதிர்பார்ப்பது இதுவேயாகும்.

குறைந்த ஊதியத்தைக் கொண்டு உயிர் வாழ முடியுமா?

ஆசிரியர்கள் நிலை உயர்ந்தால்தான் கல்வி நிலை உயரும்

சட்டமன்றத்தில் தோழர் ஏ. கோவிந்தசாமி யோசனை

சென்னை, நவ. 8—

கல்வி அறிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்தக் கல்வித் திட்டத்தை இப்படியே நிரந்தரமான சட்டமாக்கிவிடாமல், ஓராண்டுக்காலம் இதனை அமுலாக்கிப்பார்த்து, அதன் பின்பு அவசியமானல், இத்திட்டத்தைச் சட்டமாக்குவது பற்றி யோசனை செய்ய வேண்டுமென விரும்புகிறேன்.

"கல்வி முறையைச் சட்டமாக்குவது சரியா என்று ஆச்சாரியார் கூறியுள்ள கருத்தையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

"கல்வி உயர வேண்டுமானல் ஆசிரியர் நிலை உயர வேண்டும். 1956-ல் ரூ. 5-ம், தேர்தலுக்கு முன் ரூ. 7-ம் சம்பள உயர்வு கொடுத்தார்கள்; அதுவும் 1933-க்குப் பிறகு வேலைக்கு வந்தவர்களுக்கு தனிக் கூட்டு ஊதியம் தரப்படவில்லை. இந்த நிலை மாற வேண்டும்; ஆசிரியர்களின் நிலையை உயர்த்த வேண்டும்.

"பல உயர்நிலைப் பள்ளிகளில் எல். டி., பி. டி. படித்த ஆசிரியர்கள் கிடைக்கவில்லை; ஊதியம் குறைவாக இருப்பதே அதற்குக் காரணம். குறைந்தது ரூ. 150 ஊதியமாவது இவர்களுக்குத் தர வேண்டும். ஆசிரியர்களிடையே பாகுபாடுகளை அகற்றி எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஊதியம் தரப்பட வேண்டும்.

"ஓராசிரியருக்கு ரூ.18 ஊதியம் தரப்படுகிறது; இதைக்கொண்டு எப்படி வாழ முடியும்? குறைந்தது ரூ. 45 ஊதியமாவது அவர்களுக்குத் தரப்பட வேண்டும்.

"ஆசிரியர் பயிற்சிக் காலத்தை ஆறு மாதத்திற்குக் குறைக்க வேண்டும்."

கிராமப்பகுதியில் தண்ணீர் வசதி

அமைச்சர் தரும் தகவல்

சென்னை, நவ. 8—

கோவை மாவட்டத்தில் கிராமப்புறப் பகுதிகளில் தண்ணீர் வசதிக்காக 1956—57-ல் ரூ. 3,70,000-மும், 1957—58-ல் ரூ. 4 இலட்சமும் ஒதுக்கப்பட்டது என்றும், 388 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கக்கன் கேள்வி நேரத்தில்போது இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"தாலுகாவாரியாக, கிணறுகள் இல்லாத கிராமங்களைத் துப்புரவு செய்து தண்ணீர் வசதிக்கான திட்டம் வகுக்கப்படுமா?"

என்று தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி கேட்டார்.

"பொதுவாகச் செய்யப்படுகிறது; மேலும் பல திட்டங்கள் உள்ளன' என்று அமைச்சர் பதிலளித்தார்.

குறைந்த வருமானமுள்ளவர்கட்குக் குடியிருப்பு வசதி

மத்திய சர்க்கார் அளித்துள்ளகடன் தொகைபற்றிய விவரம்

புதுடில்லி, நவ. 10—

குறைந்த வருமானமுள்ளவர்களுக்கான குடியிருப்பு வசதித் திட்டத்தின்கீழ் இந்திய சர்க்கார், செப்டம்பர் மாதத்தில் பல்வேறு மாநில சர்க்கார்களுக்கு மொத்தம் ரூ. 39,21,000 கடன் அனுமதித்துள்ளது; அதில் சென்னைக்கு ரூ. 13,40,000; அசாமுக்கு ரூ. 1,81,000; பீகாருக்கு ரூ. 15 இலட்சம்; ஜம்மு-காஷ்மீருக்கு ரூ. 9 இலட்சம் கிடைத்திருக்கிறது.

இத்திட்டம் 1954 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் பல்வேறு மாநில சர்க்கார்களுக்கு மொத்தம் ரூ. 18,80,00,000 கடன் தொகைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தர!

மத்திய சர்க்கார் ஒதுக்கிய தொகை பற்றித் தகவல்

சென்னை, நவ. 8—

"தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு வீடுகள் கட்டித் தர மத்திய சர்க்கார் ரூ. 16,50,000 மட்டுமே ஒதுக்கியுள்ளது"

என்று, அமைச்சர் திரு. வெங்கட்ராமன் கேள்வி நேரத்தின்போது இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

திருச்சி, கோவை மாவட்டங்களில் இத்திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதாம்.

"நெல்லிக்குப்பத்தில் உள்ள ஆலைத் தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித்தரப்படுமா?"

என்று, தோழர் எ. கோவிந்தசாமி கேட்டார்.

"அந்த முதலாளி நிலம்தர முன்வரவில்லை" என்று, அமைச்சர் பதிலளித்தார்.

நடைமுறைக்கு இயலாதாம்

சென்னை, நவ. 8—

"குனூர், கொடைக்கானல், மகாபலிபுரம் போன்ற இடங்களில் உடல்நலம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் தங்குமிடம் ஏற்படுத்தும் திட்டம் நடைமுறைக்கு சாத்தியமல்ல"

என்று, தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

நெல் வியாபாரிகளுக்கு 'லைசென்சு' வழங்கும் முறை

டெல்லியிடம் சென்னை சர்க்கார் கோரிக்கை

சென்னை, நவ. 9—

நெல் வியாபாரிகளுக்கு 'லைசென்சு' வழங்கும் முறையை ஏற்படுத்துமாறு மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது சம்பந்தமாக சென்னை அரசாங்கம் யோசித்து வருகிறதாம்!

தஞ்சை மாவட்டத்திலிருந்து ஏராளமான அரிசி கேரளத்துக்குக் கொள்முதல் செய்து எடுத்துச் செல்லப்படுவதைத் தடுப்பதே இதன் நோக்கம் என்று தெரியவருகிறது.

மற்றும், ஆந்திராவிலிருந்தும் கூட வியாபாரிகள் தஞ்சைக்கு வந்து அரிசி கொள்முதல் செய்வதாகவும், ஆந்திர அரிசி குறிப்பிட்ட 'கோட்டா'படி சென்னைக்குக் கிடைப்பதில்லையென்றும் கூறப்படுகிறது.

அரசாங்கமே கொள்முதல் செய்து மாநிலங்களுக்கு 'சப்ளை' செய்யலாம் என்று சென்னை சர்க்கார் தெரிவித்த யோசனைக்கு மத்திய சர்க்காரிடமிருந்து இன்னும் பதில் வரவில்லையாம்!

கோதுமை உண்ணும் பழக்கத்தை ஊக்குவிக்க ரொட்டிக் கிடங்குகள் ஏற்படுத்த மத்திய பணவுதவி கிடைக்குமாம்!

மீனவர்களுக்கு உதவி

சென்னை, நவ. 10—

1957—58-ல், மீனவர்களுக்கு ரூ. 3 இலட்சம் கடன்கள் அளிக்கவும் ரூ. 25,000 உதவித் தொகை அளிக்கவும் அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 1957-58-ல், சென்னை நகரம், மற்றும் செங்கற்பட்டு, தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்னுற்காடு, கன்னியாகுமரி மாவட்டங்கள் ஆகியவைகளில் 20 மீனவர் கூட்டுறவு கழகங்களுக்கு நீண்டகாலக் கடன் வழங்க ரூ. 2,40,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீனவ உறுப்பினர்கள் மீன் பிடிக்கும் கருவிகள் முதலியவைகளை வாங்கவும், கடன்களைத் தீர்க்கவும், ஒரு நபருக்கு ரூ. 500 வீதம் நீண்டகாலக் கடன்களை அந்தக் கழகங்கள் வழங்கும்; மேலும், நீண்டகால உதவி பெற இயலாத மீனவர் கூட்டுறவுக் கழக உறுப்பினர்களுக்கு 5 வருடத்தில் திருப்பிச் செலுத்தக் கூடிய கடன் ரூ. 200 வரை அரசாங்கம் வழங்கும்; இதற்கென அரசாங்கம் ரூ. 40,000-மும், மீன் விற்பனை ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக ரூ. 50,000-மும் அனுமதித்திருக்கிறது.

இந்தியாவில் தொழில் துறைத் தகராறுகள்

முடிவுகள் பற்றி விவரம்

புதுடில்லி, நவ. 10—

ஆகஸ்டு மாதத்தில் புதிதாக ஏற்பட்ட தொழில் துறைத் தகராறுகளையும் சேர்த்து, இந்த மாதத்தில் மொத்தத் தகராறுகளின் எண்ணிக்கை 145; இதில் 22 கதவடைப்புகளும் அடங்கும்.

புதிதாக ஏற்பட்ட முக்கியத் தகராறுகளில் 24 தகராறுகள் சம்பளம், படி ஆகியவைகள் காரணமாகவும், 21 தகராறுகள் சிப்பந்திகள் காரணமாகவும், 16 தகராறுகள் 'போனஸ்' சம்பந்தமாகவும் ஏற்பட்டன.

பரிசீலனை மாதத்தில் 113 தகராறுகள் முடிவுக்கு வந்தன; இவைகளில் 47 தகராறுகளில் தொழிலாளர்களுக்குப் முழு வெற்றியோ அல்லது ஓரளவு வெற்றியோதான் ஏற்பட்டது; 31 தகராறுகளில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை; 26 தகராறுகளில் நிர்ணயமான முடிவுகள் இல்லை; 9 தகராறுகளின் முடிவுகள் பற்றி விவரம் தெரியவில்லை.

முதுகுளத்தூர் சம்பவங்கள்:

‘உயிரிழந்தோருக்கு கண்ணீரைக் காணிக்கையாக்குகிறேன்’

‘சர்க்கார் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காததேன்?’

சட்டசபை விவாதத்தில் சத்தியவாணிமுத்து கருத்துரை

29—10—57 அன்று சட்ட மன்றக் கூட்டத்தில் ‘அமைச்சர் அவை மீது நம்பிக்கையில்லை’ என்னும் தீர்மானத்தின்மீது முதுகுளத்தூர் சம்பவம் குறித்து, டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் ஆற்றிய உரை :—

முதுகுளத்தூர் கலகத்தைப் பற்றி நான் விவாதிப்பதற்கு முன்னால், இது சாதிச் சண்டையோ அல்லது அரசியல் பூசலோ, எதுவாகயிருந்தாலும், இந்த நாகரீகக் காலத்தில் மனித உயிர்கள் பயங்கரமான வெறிச் செயல்களால் பாதிக்கப்பட்டிருப்பதைக் குறித்து வருந்தி எனது கண்ணீரை அங்கு மறைந்தவர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் காணிக்கையாக்குகிறேன்.

“இந்தக் கலகத்தில் பாதிக்கப்பட்ட ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்பதால் மட்டுமல்ல; அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் தங்கள் அடிப்படை உரிமைக்காக என்றைக்காவது வீறிட்டு எழ வேண்டும்—அப்படி எழுவதின் மூலமாகத்தான் அவர்கள் உரிமை பெற முடியும் என்ற ஒரே முடிவில் நம்பிக்கையோடு பணிபுரிந்து வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் என்ற காரணத்துக்காகவும், நான் என்னுடைய கட்சியின் சார்பாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

“முதுகுளத்தூரில் நடந்த அக்கிரமச் செயல்களைப் பற்றி எதிர்க் கட்சிக்காரர்கள் என்ற முறையிலே சர்க்கார்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து பேசிய கருத்துக்கு நான் வேறுபட்டவன்; இதனால் சில உறுப்பினர்களோ, மற்றவர்களோ வேறுவிதமாக நினைக்கலாம். நான் சர்க்கார்மீது முற்றிலும் மாறான கோணத்திலிருந்து குற்றம் சாட்டுகிறேன். நடந்தவற்றை அவ்வளவையும் நோரகப் பார்த்து, அதன் மீது எனது கண்டனத்தைத் தெரிவிப்பதுபோல் அல்ல, நான் சொல்லவிருப்பது; சர்க்கார், இம்மாதிரி அநியாய நிகழ்ச்சிகளில் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தார்களா அல்லது இல்லையா என்பது தெளிவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

“தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற இந்த இழிசெயல்கள், சமுதாயத்தில் எல்லோருக்கும் இருக்கக்கூடிய இந்த உயர்வு—தாழ்வு, சாதிப்பூசல் காரணமாகத்தான் என்பதைப் பலரும் அறிவார்கள். இந்தப் பூசலும் இதற்காகத்தான் ஏற்பட்டது என்று போலீஸ் அமைச்சர் அவர்கள் தமது அறிக்கையில் விளக்கம் தந்து இருக்கிறார்கள். 1930-ம் ஆண்டிலேயிருந்து தொடர்ச்சியாக நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வந்த போலீஸ் அமைச்சர் அவர்கள், 1932-வது ஆண்டைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். 1932-ம் ஆண்டு வரையிலும் குறிப்பிட்டிருக்கிற கனம் அமைச்சர் அவர்கள், ஒரேயடியாக 1949-ம் ஆண்டிற்குத் தாவுகிறார்கள்; இடையிலே இருக்கின்ற 17 ஆண்டுகள் என்னவாயின? சர்க்கார் அறிக்கைப்படி மறவர்களும், ஆதிதிராவிடர்களும் ஒருவர் வீட்டிலே ஒருவர் பெண் கொடுக்கிற அளவிற்கு வாழ்ந்து வந்திருக்கிறார்களா என்பதை அவர்கள் தெரிவிக்கவேண்டும். அல்லது, 17 ஆண்டுகளிலே அந்தப் பகுதியிலே இருந்த நிலைமைதான் என்ன என்பதைச் சர்க்கார் தெரிந்துகொண்டார்களா, இல்லையா? அதற்கும் விளக்கம் தெரிவித்தால் மிக்க நலமாக இருக்கும். ஆனால் அதைக் குறித்து நான் பலரிடமிருந்து விசாரித்துத் தெரிந்துகொண்ட முறையில், 1933-லிருந்து பலமுறை அப்படிப்பட்ட கலகங்களும், சாதிப் பூசல்களும் ஏற்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகும். வகுப்பு வாதத்தின்மீது ஏற்படும் கலவரம் இவையெல்லாம் என்று சொல்லுபவர்கள் தப்பித்துக்கொள்ளமுடியும். நான் இதற்கு அவர்கள் மீது குற்றம் சாட்ட விரும்பவில்லை.

“1937-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் இராமநாதபுரம் ராஜா அவர்கள் காங்கிரசுக்கு எதிராக நின்றிருக்கிறார்கள். அப்பொழுது காங்கிரசு அபேட்சகராக இருந்தவர் திரு. முத்துராமலிங்க தேவர் ஆவார். இதனை சர்க்கார் தரப்பிலே உள்ளவர்கள் மனதிலே கொள்ளவேண்டும். அன்று திரு. முத்துராமலிங்க தேவர் காங்கிரஸ் சார்பிலே பொதுமக்களை, ‘உங்கள் வாக்குகளை மங்களகரமான மஞ்சள் பெட்டிக்கே போடுங்கள்’ என்று ஓட்டுகளைக் கேட்டிருக்கிறார். வாக்குகளைக் கேட்கின்ற முறையிலே ஏற்பட்ட பூசல்களுக்காகவும்—அப்போது அவர்களுக்கு அடிமைகளாக இருக்கிற ஆதிதிராவிட மக்கள் திரு. தேவருக்கு ஓட்டு போடாத காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர் செய்த பயங்கரக் கொடுமைகளுக்காகவும் மதுரை அடிஷனல் ஜில்லா மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அவர்கள்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்திருக்கிறது என்பது மாற்றுக் கட்சிக்காரர்களுக்கும் தெரிந்திருக்கிற விஷயம். அந்நேரத்தில் காங்கிரசில் இருந்த திரு. தேவர் அவர்களுக்கு ஆதிதிராவிட மக்கள் தங்கள் வாக்குகளைத் தரவில்லையென்று அம்மக்களை இம்சித்திருக்கிறார்கள். இதுமாத்திரம் அல்ல; அன்றையதினம் காங்கிரஸ் உயர்சாதிக்காரர்கள் இன்னும் நல்ல முறையிலே செல்வாக்குப் பெற்று இருந்த காரணத்தால், இந்தத் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களை தனது கட்சிக்கே வாக்குகளைப் போடவேண்டும் என்று இம்சித்திருக்கிறார்கள் என்பதை காங்கிரஸ்காரர்களும் அறிந்திருக்கிறார்கள் என்பது இப்பொழுது விளக்கமாகத் தெரிகிறது.

“இதை நான் சொல்லுவது அரசாங்கத்திற்கு இது தெரியாது என்பதற்காக அல்ல; திரு. தேவர் அவர்கள் அப்பொழுது எந்தக் கட்சியிலேயிருந்தார்—அவர்மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் இருந்தன—அவரிடமிருந்து ஜாமீன் தொகைகூட வாங்கப்பட்டது குறித்து சர்க்காருக்குக் கவனமூட்டுவதற்காகவே சொல்லுகிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

“எனக்கு முன்னர் பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் திரு. தேவரின் தூண்டுதலின்பேரில் யாரோ டெபுடி தாசில்தார் சிதம்பரம் முதலியாரின் காலைவெட்டியதாகவும், சப்-மாஜிஸ்திரேட் கொலை சம்பந்தமான—இன்னும் பல குற்றங்களும் அவர்மீது சாட்டப்பட்டிருக்கின்றன என்றும் சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட திரு. தேவர் அவர்கள் செய்திருக்கிற பல பயங்கரமான பிரசாரத்தைப் பற்றியும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

“நான் வேறு ஒன்று அவர்களைக் கேட்கிறேன் — இமானுவேல் என்பவர் கொலை செய்யப்பட்டார்; அப்படிச் செய்ததற்கு தேவர்தான் ஆதாரமாக இருக்கக்கூடும் என்று சொல்லுவதற்கு அறிகுறியாக சமாதான மாநாட்டில் தேவர் அவர்கள் ஏதோ வார்த்தையைச் சொன்னார்களென்றும், பிறகு தன் தோழர்களைப் பார்த்து ‘ஒரு பள்ளன் இப்படிப் பேசுகிறானே—நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே’ என்று அவர்கள் சொன்னதாகவும், தோழர் சீனிவாசன் அவர்கள் மனதில் வைத்துப் பேசிய கருத்து மூலமாக நான் சொல்ல விரும்புகிறேன். அவர் அப்படிப் பேசியபோது திரு. சசிவர்ண தேவர் அவர்கள், ‘அது எப்பொழுது, எங்கே நடைபெற்ற செய்தி என்று சொன்னால் நலமாயிருக்கும்’ என்று சொன்னார்கள். அவர் சார்பாகச் சொல்லுகிறேன்—இந்த ஜாமீன் தொகைக் கட்டவேண்டுமென்ற கோர்ட் நடவடிக்கைகளின் தீர்ப்பிலிருந்து ஒரு நிகழ்ச்சியைப் படித்துக் காட்டமுடியும்; இப்படி சொல்வதிலிருந்து தோழர் சசிவர்ண தேவர் மீது தவறாகப் பேசுகிறேன் என்று அவர் நினைக்கக்கூடாது. இது சர்க்காருக்குப் பலவருடங்களுக்கு முன்னாலே தெரியும். அப்படி தெரிந்திருந்தங்கூட, அவர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? நான் சொல்லுகிற வார்த்தை, இம்மன்றத்துக்குத் தகாத வார்த்தையாக இருக்கலாம் — உள்ளத்திலேயுள்ள வேதனையால் சொல்லுகிறேன்.

“இன்று ஆளும் கட்சியினர் ஓலமிடுகின்றனர். நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர். நான் கேட்கிறேன்—இந்த நீலிக் கண்ணீர் இத்தனை காலமாக எங்கே சென்றிருந்தது? அரிசனங்களுக்காக நாங்கள்தான் எல்லாம் செய்கிறோம் என்று சொல்லுவதில், இந்த உபதேர்தலுக்கு அப்புறமா உங்களுக்கு அக்கறை தோன்றிற்று? ஏன் இதற்கு முன்னமேயே நிலைமையை ஒழுங்காக்கியிருக்கக்கூடாது? ஆளும்கட்சியினராகிய உங்களுக்கு எத்தனையோ மகசர்கள் வந்திருக்கும்—அங்கு நடக்கும் கொடுமைகள் பற்றி; ‘நாங்கள் அரிசனங்களுக்காகத்தான்’ என்று சொல்லுகிற ஆளும் கட்சியினர், இதற்குமுன் ஆயிரக்கணக்கான மகசர்கள், அங்கு கொடுமைகள் நடக்கின்றன என்று சொல்லிவந்தபோது என்ன செய்தாங்கள்?

“அதை ஆதாரமாக வைத்துச் சொல்லுகிறேன் —அரிசனங்களின் வாக்குகளைப் பெறவே ஆளும் கட்சியினரின் முயற்சியே தவிர, வேறு ஒன்றும் அவர்களுக்காகப் பாடுபடவில்லை. அப்போது இருந்த வாக்குகள் காங்கிரசுக்கு எதிராக இருந்தன; இப்போதுள்ள வாக்குகள் இவர்களுக்கு வரலாம் என்பதற்காக, இதை ஒரு மையமாக வைத்துக்கொண்டு நாடகம் நடத்துகிறார்கள், ஆளும் கட்சியினர்.

“போலீஸ் அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலின்மீது அவர்கள் கூறுகிறார்கள்—‘டென்ஷன்’ இருந்துகொண்டேஇருந்தது—என்று. கடந்த சட்டமன்ற நிகழ்ச்சிகளின்போது, ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு தோழர், அந்தப் பகுதியில் மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் எடுக்கும் கிணறுகளில் யாரோ மண்ணெண்ணெயை விட்டார்கள் என்றும், எருக்கஞ்செடிகளைப் போட்டார்கள் என்றும் கூறியபோது, அப்போது போலீஸ் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—‘அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இப்போது கிடையாது’—என்று! திறமையாகப் பதில் சொல்கிறோம் என்று பதில் சொன்னாரே தவிர, அதற்குப் பின்னால் உள்ள நிலைமையைப் புரிந்துகொண்டார்களா? அப்படிப் புரிந்து கொண்டால் ஏன் இன்று இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட வேண்டும்? அப்படிப்பட்ட நிலைமை வாராமலிருப்பதற்கு ஏன் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை? அப்படி தக்க சமயத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால், ஏன் இன்று, இந்நாட்டில், மக்கள் கண்ணீர் விடக்கூடிய அளவு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும்? ஆகவே, பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லை என்பதற்கு இது ஆதாரமாகும்.

“திரு. தேவர் அவர்கள் பேசிய பேச்சுக்களைப் பற்றி அமைச்சரவர்களும் சொல்லிவிட்டார்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் அதைப் பற்றிச் சொன்னார்—போலீஸ் துப்பாக்கிகள் சோளத்தட்டு மாதிரி என்றும், நமது முதலமைச்சர் கள்ள நோட்டுகள் அடிக்கிறார்கள் என்றும், காமன் வெல்த்திலிருந்து இந்தியா பிரிந்து விடவில்லையென்றால் மூன்றாவது உலக யுத்தம் முதுகுளத்தூரில் நடத்துவேன் என்றும் அவர் கூறியிருப்பதாகச் சொன்னார்கள். அவர் அப்படிச் சொன்னாரோ இல்லையோ—அவருக்காக நான் வக்காலத்து வாங்கிக்கொண்டு வரவில்லை—இவ்வளவையும் நீங்கள் கேட்டுக்கொண்டுதானே இருந்தீர்கள்? முதலமைச்சர் கனம் காமராசர் அவர்கள் கள்ள நோட்டு அடித்தாரோ இல்லையோ என் நடவடிக்கைகள் எடுக்க இவ்வளவு தாமதம்? இவ்வளவு நாட்கள் கழிந்த பின்தானா நடவடிக்கைகள் எடுப்பது?

“ஆனால், அதே நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் ஜனநாயக முறையில் உண்மையை எடுத்துச் சொன்னால், எங்களைப் பார்த்து முதலமைச்சர் உள்பட — ‘உங்களை மூலையிலே கிள்ளி எறிந்துவிடுவோம்; கட்டைவிரலை எடுத்துவிடுவோம்’ என்றெல்லாம் பொதுமேடைகளில் பேசுகிறவர்கள், ஏன் இப்படிப்பட்ட பயங்கரமான சொற்களைக் கேட்டுக்கொண்டு சும்மா இருக்கவேண்டும்? எந்தப்பக்கம் செல்வாக்கு ஒங்குகிறது என்று பார்த்துக்கொண்டு 151-வுடன் கூட இரண்டு மூன்றை எப்படிச் சேர்த்துக்கொள்ள முடியும் என்று பார்க்கிறீர்களா? அங்கு ‘டென்ஷன்’ இல்லாமலிருந்தால் இந்தக் கேள்வியே எழாது. சர்க்கார் அதைப் புரிந்துகொள்ளாவிட்டால் இதைக் கேட்கப்போவதில்லை. நான் கேட்கிறேன்—அப்படி அங்கு ‘டென்ஷன்’ இருந்தும் ஏன் அங்குள்ளோருக்குப் பாதுகாப்பு கொடுக்கவில்லை? சமாதான மாநாட்டிற்குப் பிறகு ‘டென்ஷன்’ மேலும் கூடிவிட்டது என்கிறார்கள்; அப்படியிருக்கும்போது அவர்களுக்குக் கொடுத்த பாதுகாப்பு என்ன?

“இமானுவேல் கொலை செய்யப்பட்டார்; அதற்கு நான்கு நாட்களுக்குப் பிறகுதான் கீழத்தூவலில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. அக்கொலை செய்யப்பட்டவுடன் யார் யாரைப் போலீஸ் சென்று கைதாக்கியிருக்கிறது? யாரையெல்லாம் கூண்டில் அடைத்திருக்கிறது? ஒரு வகுப்பாருக்கும்—இன்னொரு வகுப்பாருக்கும பூசல் நடந்துகொண்டிருக்கிறது; அதன் காரணமாக ஒரு சமாதான மாநாடு கூட்டப்பெற்றது; அதன்பின் கொலை நடந்திருக்கிறது. ஏன் கொலை நடந்த அடுத்தநாள் சந்தேகத்தின் பேரில் போலீஸ் ஒருவரையும் கைது செய்யவில்லை? கீழத்தூவலில் துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது; இதற்குக் காரணம் என்ன? இவ்வளவு பயங்கரமான ஆயுதங்களை—வேல் கம்பு, அரிவாள் இவைகளைத் தாங்கிவந்தார்களென்றும், மஞ்சள் உடை உடுத்திக்கொண்டு யுத்தத்துக்குச் செல்வதுபோல் சென்றார்கள் என்றும் சர்க்கார் இப்போது சொல்லுகிறார்கள்; அங்கு ஏன் கூடுதல் போலீஸ் படையைப் போடவில்லை? துப்பாக்கிப் பிரயோகத்திற்குமுன் ஏன் அங்கு ரிசர்வ் போலீஸ் படையைப் போடக்கூடாது? ஏன் அங்கு இராணுவத்தைப் போட்டிருக்கக் கூடாது? வடநாட்டுத் தலைவர்கள் வருகிறார்கள் என்றால் அவர்களுக்காக இராணுவ அணிவகுப்பை நடத்துவதற்காக இராணுவம் வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக இராணுவம் வைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

“போலீஸ் சுட்டதைப் பற்றி அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள்—‘போலீஸ் தற்காப்புக்காகச் சுட்டது’—என்று; யாருக்கு யார் பாதுகாப்பு கொடுப்பது? ஏழை எளியவர்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாக்கப் போலீசா; அல்லது போலீசுக்காகப் பாதுகாப்பா? மற்றவர்களைப் பாதுகாக்க என்று போலீஸ் இல்லாமல், போலீசுக்காகப் பாதுகாப்பு என்றால் அதற்கு ஏன் இந்த அரசு இருக்க வேண்டும்? போலீசுக்கு வேறு பாதுகாப்பு—போலீசை யார் பாதுகாக்கவேண்டும்? இராணுவமும், ரிசர்வும் என்ன செய்து கொண்டிருக்கின்றன? கீழத்தூவல் துப்பாக்கிப்பிரயோகத்தில் எப்படிச் சுட்டார்கள்—குண்டு எங்கே விழுந்தது—நேரே விழுந்ததா என்பதைப்பற்றியெல்லாம் விசாரணை செய்வது ஒருபுறமிருக்க, பயங்கரமான நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன; கொலை, கொள்ளைகள் நடந்திருக்கின்றன.

“நிலைமை சுமுகமாக வேண்டுமானால் ஐ. சி. எஸ். அதிகாரி வெங்கடேசுவரனை எப்போது அனுப்பியிருக்கவேண்டும்? யார் யார் என்னென்ன குற்றங்கள் செய்தார்கள் என்று ஓரளவு சந்தேகத்தின்பேரில் ஒருசிலரைக் கைது செய்து, அதிகப்படியான போலீஸ் படையை அங்குள்ளவர்களின் பாதுகாப்பிற்காக அனுப்பி, நிலைமை அடங்கியபிறகு விசாரணைக் குழுவை அனுப்பியிருந்தால் ஒருசில நன்மைகள் அப்பகுதியில் ஏற்பட்டிருக்கக்கூடும். அப்படிச் செய்யாமல், விசாரணை நடத்தி, விசாரணை சமயத்தில், ஒருவர்—இந்தப் பக்கத்தில் குற்றம் என்று சொல்ல, வேறு ஒருவர்—அந்தப் பக்கத்தில் குற்றம் என்று சொல்ல, ஒருவர்—இங்குதான் கொலை விழுந்தது என்று சொல்ல, நான் அடிக்கவில்லை—நீ அடிக்கவில்லை என்று வேறொருவர் சொல்ல—இப்படி ஒருவருக்கொருவர் சொல்லி, இரு தரப்பாருக்கிடையிலும்—இரு வகுப்பாருக்கிடையிலும் மனக்கசப்பு வளர்ந்தது; விரோதமும் கூடுகிறது. ‘அவன் அப்படிச் சொன்னான்’ சரி, அவனை நாளை பார்த்துக் கொள்வோம்; ‘இவன் இப்படிச் சொன்னான்? சரி இவனை இன்றே பார்த்துவிடலாம்’—என்று நிலைமை மோசமாகிவிட்டிருக்கிறது.

முதுகுளத்தூரிலும், பரமக்குடியிலும் கலவரம் ஏற்பட்டிருக்கும்போது, சிவகெங்கையிலும், அருப்புக்கோட்டையிலும் இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள உடைமைகள் பாழாக்கப்பட்டிருக்கின்றன; பல கிராமங்கள் தீயிடப்பட்டிருக்கின்றன; இருந்தும், ஒரு உயிர்கூட போகவில்லை என்று கூறப்படுகிறது. காரணம் என்ன? அங்கு ஏற்கனவே வகுப்புத்துவேஷமும், ஆத்திரமும், அக்கிரமும் வளர்ந்துகொண்டு வந்திருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இவ்வளவு இருந்தும்கூட, ஏன் முன்னால் அங்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

“இறுதியாக, திரு. முத்துராமலிங்கத்தேவர் அவர்களை 29-ந் தேதியன்று கைது செய்திருக்கிறார்கள். முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் மக்களைத் தூண்டிவிடக் கூடிய பிரசங்கங்களைச் செய்தார் என்று சொல்லுவதானால், ஏன் முன்னாலேயே அவர்களைக் கைது செய்திருக்க

(4-ம் பக்கம் பார்க்க)

ஏற்றிவைத்த விளக்கு தி. மு. கழகம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"திராவிட முன்னேற்றக் கழகம் தன் குறியை ஒரே பக்கம் திருப்பிவிடவில்லை; பல முனைகளிலும் செலுத்தி இடையருது பணிபுரிந்துவருகிறது. தி.மு. கழகம் இன்று நல்ல ஒரு கூட்டுச் சக்தியாக விளங்கிவருகிறது.

"'சாதி ஒழிய வேண்டுமா?' என்ருல், 'ஆம்; அது ஒழிக்கப்பட்டே ஆகவேண்டும்' என்கிறது, தி. மு. கழகம்; 'மத அநீதிகள், கடவுளின் பேரால் நடக்கும் அக்கிரமங்கள் அடக்கப்பட வேண்டுமா?' என்ருல், 'நிச்சயம் அடக்கப்பட்டாக வேண்டும்' என்று சொல்லி, அதற்காகவும் பாடுபடுவறது; 'பொருளாதார பேதபேதங்கள், அவற்றினுல் ஏற்படும் இல்லாமை, அதனுல் விளையும் இடையூறுகள் இருக்கலாமா?' என்ருல், 'அத்தனை இழிநிலைகள், துன்பங்கள் துயரங்கள், தொல்லைகள் துடைக்கப்பட வேண்டும்—ஒழிக்கப்படவேண்டும்' என்கிறது தி. மு. கழகம்; 'அரசியல் ஆதிக்கம் வேண்டுமா?' என்று கேட்டால், 'நிச்சயம் வேண்டும்' என்று கூறி, முன்னுலேயே அரசியலில் ஆதிக்கம் கொண்டுள்ளவர்களிடமிருந்து அதைப் பெற சட்டசபையில் இடம் பெற்று அரசியலை அலசிப் பார்த்துவருகிறது, தி.மு. கழகம்.

"நான் இங்கு நின்று பேசும் இதே இடத்திலிருந்துதான் தி. மு. கழகம் துவக்கப்பட்டது. அன்றும் மழை பெய்துகொண்டிருந்தது — இன்றும் மழை பெய்துகொண்டிருக்கிறது. அன்றும் மக்கள் கலையாமல் பேச்சைக் கேட்டனர்—இன்றும் கலைந்து செல்லாமல் என் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

"பெய்கின்ற மழையில் சேறும் சகதியும் நிரம்பிய இந்த இடத்தில் நீங்கள் இத்தனைத் தொல்லைகளையும் தாங்கிக்கொண்டு இங்கு கூடியிருப்பதைக் கண்டு பாராட்டுகிறேன். இழுத்துப் போர்த்திக்கொண்டு வீட்டில் தூங்க வேண்டிய இந்த நேரத்தில் நீங்கள் இங்கு கூடியிருக்கிறீர்கள் என்ருல் இதற்கு அவரவர் தங்கள் தங்கள் வேலையை முக்கியமாகக் கருதுவதுதான் காரணம்.

"அலுவலகங்களிலே பணியாற்றும் குமாஸ்தாக்கள், தங்கள் தங்கள் வேலையை முக்கியமாகக் கருதுகிருர்கள்; நல்ல மழை பெய்கிறது என்ருல், குடை வியாபாரம் அதிகமாக நடக்கும் என்ற காரணத்தால் 'இன்னும் கொஞ்சம் மழைநீடிக்கக்கூடாதா' என்று குடை வியாபாரிகள் கருதுவார்கள்; ரிக்ஷாக்காரர்கள் தங்கள் வேலையிலே கருத்துச் செலுத்துவார்கள்; இப்படி அவரவரும் அவரவர் வேலைகளை முக்கியமாகக் கருதுகின்றனர். அதே போல்தான் நமக்கென்று இருக்கின்ற அலுவல்களில் முக்கியமாக ஈடுபடுகிறோம். அத்தகைய அலுவலில் நல்ல அரசியல் விழிப்புணர்ச்சியும், தாயக உரிமை வேட்கையும் நிரம்பியிருப்பதைப் பார்க்கிறோம். அந்த ஆவலின் விளைவாகவே பெருமழையிலும் இப்படிப்பட்ட கூட்டங்களில்வந்து பெருவாரியாகக் கூடுகிறீர்கள்.

"எனக்குமுன் பேசிய மாணவர் ஒருவர், ரஷ்யா பறக்கவிட்டிருக்கும் செயற்கைச் சந்திரனைப் பற்றிக் குறிப்பிட்டார். இந்த நேரத்தில் எனக்கு, பத்திரிகையில் படித்த செய்தியொன்று நினைவுக்கு வருகிறது. ரஷ்யாவின் இந்தச் செயற்கைச் சந்திரனின் ஆற்றலைப் பற்றிப் பத்திரிகையில் படித்த ஒரு ஜப்பான் நாட்டு இளைஞன் தற்கொலை செய்து கொண்டானும். இவ்வளவு பெரிய ஆற்றலைக்கொண்டு விளங்கும் ரஷ்யா, ராக்கெட் மூலம் அமெரிக்காவிலும், மற்ற நாடுகளிலும் குண்டு வீசினுல் என்ன ஆகும் என்று அந்த இளைஞன் பயந்து, கவலைகொண்டானும்; அதனுலேயே தற்கொலை செய்துகொண்டிருக்கிருன்.

"பத்திரிகையில் வரும் பல செய்திகளில், இந்தச் செயற்கைச் சந்திரனைப்பற்றிய ஒரு செய்தியை மட்டும் படித்து, அதைப்பற்றியே சிந்தனை செய்ததன் விளைவாகவே அவன் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்கு ஆளாகியிருக்கிருன்.

"செயற்கைச் சந்திரன் பறக்கவிட்ட அதே ரஷ்ய நாட்டில் சினிமாக்கள் நடக்கின்றன; நாடகங்களும், சர்க்கஸ்களும் நடத்தப்படுகின்றன; தொழிற்சாலைகள் இயங்குகின்றன; ஆசிரியர்கள் பணியாற்றுகிருர்கள்; அத்தனை வேலைகளும் நடக்கின்றன; அவை பற்றிய செய்திகளும் வருகின்றன. ஆனல், செயற்கைச் சந்திரன் விடும் ஒரே நிகழ்ச்சியோடு முடிவடைந்துவிட்டதாக நினைத்ததனுல்தான் அந்த ஜப்பான் இளைஞன் தற்கொலை செய்துகொள்ள நேரிட்டது.

"அதேபோல, நாம் எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்கிறோம்.

"தூண்டிவிடப்பட்ட அறிவு தேவை என்று நான் சொன்னேன். இந்த நாட்டு அரசியலில் 'அடுக்களை'யிலே நம் தாய்மார்கள் பயன்படுத்துகிற 'அறிவு' இருந்தாலே போதும்; வேறு பெரிய அறிவுத்திறன் தேவையில்லை.

"நம் தாய்மார்கள் சமையல் செய்வதிலே நல்ல 'கைபாகம்' தெரிந்தவர்கள்; கொதிக்கின்ற பண்டத்தில் எவ்வளவு திட்டமாக உப்பு போட்டாலும், அதைக் கொஞ்சம் கையால் எடுத்து வாயில் போட்டுச் சுவைத்துப் பார்ப்பார்கள்—'நாம் போட்ட உப்பு போதுமா, அல்லது அதிகமாகப் போட்டுவிட்டோமா'—என்பதை அறிய; அந்த நேரத்தில், அதைப் பார்த்துக்கொண்டிருக்கிற கணவன், 'என் வாயில் போட்டுக்கொண்டாய்?' என்று கேட்டால், அதில் அர்த்தமில்லை.

"எதை எதனுடன் கூட்ட வேண்டும்; எதை எப்பொழுது எற்ற வேண்டும்—இறக்க வேண்டும் என்பது நம் தாய்மார்களுக்கு நன்ருகத் தெரியும்.

"குழம்பு கொதிக்கும்போது அடுப்பிலிருக்கும் விறகைச் சற்று உள்ளே தள்ளுவார்கள்; பால் காய்ச்சும்போது உள்ளே எரியும் விறகைச் சற்று வெளியே இழுப்பார்கள். எதற்கு சூடு அதிகம் தேவை—எதற்கு சூடு குறைக்கப்பட வேண்டும் என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

"தாய்மார்களுக்குத் தெரிந்திருக்கும் இந்த அரிய வித்தை—தெளிவு ஏற்பட்டால் அரசியலில் குழப்பமிருக்காது.

"எதை எதனுடன் கூட்ட வேண்டும்—எதற்கு அதிகச் சூடு தரவேண்டும்—எதைக் குறைக்க வேண்டும் என்பது இந்த அரசாங்கத்துக்குப் புரியாத காரணத்தால்தான், முதுகுளத்தூரும், 'மூரளீஸ் கபே'யும் ஏற்படுகின்றன. இதைத்தான் நான் சட்டசபையிலும் சொன்னேன். எந்தப் பிரச்சினையையும், உருவாகும் நேரத்தில் கவனிப்பதில்லை.

"இதற்கும், தாய்மார்கள் பற்றிய ஒரு உதாரணத்தையே சொல்லி விளக்க விரும்புகிறேன்.

"இந்த வீட்டுப் பெண் கர்ப்பம் தரித்திருக்கும் செய்தி இந்த வீட்டுக்காரர்களால் ஊருக்குத் தெரிவதில்லை; பக்கத்து வீட்டுப் பெண்மணிகளே அதையறிந்து மற்றவர்களுக்குத் தெரியப்படுத்திவிடுவார்கள். கர்ப்பம் தரித்த பெண் வாந்தி எடுத்தால், 'மசக்கை' என்பதை அறிந்துகொள்வாள் பக்கத்து வீட்டுப் பெண்மணி; பிரசவ நேரத்தில் 6-7 டாக்டர்களுக்கு ஆள் அனுப்பி, அவர்கள் வந்து ஆபரேஷன் செய்து, கத்தியும் உடைந்து, தாயும் மரணப்படுக்கையிலிருக்கும் செய்திவரை அடுத்த வீட்டு அடுக்களையிலிருக்கும் பெண்மணிகளுக்குத் தெரிந்துவிடும். இத்தகைய ஆணங்குகளுக்குள்ள தெளிவு அரசியலில் ஏற்பட்டால் போதும்.

"'மூரளீஸ் கபே' பற்றி நான் பேசுகையில், கேரள சர்க்கார், பெயர்ப் பலகைகளில் சாதிப் பெயரை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கும் அறிக்கையைச் சுட்டிக்காட்டினேன். வேருெரு மாநில சர்க்காருக்குத் தெரிந்தது இந்த சர்க்காருக்கு ஏன் தெரியவில்லை என்று நான் கேட்டேன்.

சட்டசபையில்—நானும் பார்த்தேன் — 'யாராவது இந்த மூரளீஸ் கபே பிரச்சினையைப் பற்றி ஒரு வார்த்தை பேசுகிருர்களா?'—என்று! எவருமே பேசவில்லை. நாம் எவ்வளவு தள்ளப்பட்டவர்களாயிருந்தாலும், துரத்தப்பட்டவர்களாயிருந்தாலும், அதையும் நாம்தான் பேச வேண்டியிருக்கிறது.

"காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள் அத்தனைப் பேருக்கும் தேர்தலின்போது பெரியார் ஆதரவு கொடுத்தாரே, அவர்களில் ஒருவராவது இதுபற்றிப் பேசமாட்டாரா—என்று நினைத்தேன்; எவரும் பேசவில்லை.

"இந்தப் பிரச்சினையைப் பற்றி இவர்கள் பேசி விளம்பரம் தேடிக்கொள்ள விரும்புகிருர்கள் — என்று, எங்களைப் பற்றிச் சிலர் கூறுகிருர்கள்; அதை நான் பொருட்படுத்தவில்லை. இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவோர் நாங்களாகத்தானிருக்க முடியுமே தவிர, வேறு எவரும் பேசமாட்டார்கள்.

"இந்தப் பிரச்சினையைப் பேசுவதால் நாங்கள் தாத்தையோ, நிறத்தையோ இழக்கவில்லை. அப்படி எப்பொழுதாவது தாத்தில் குறைந்தோமென்ருல், 'உங்களுக்குள்ள ஆற்றலால் எங்களை உயர்த்துங்கள்; அந்த உரிமையைப் பரிபூரணமாக உங்களுக்குத் தருகிருேம்' என்று எங்களைக் குறை கூறுபவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

"நாங்கள் சொல்லும் எதுவும் சட்டசபையில் வெற்றிபெருததற்குக் காரணம், நாங்கள் 15 பேர்—ஆளும் கட்சியார் 150 பேர்! சனநாயகத்தில், நியாய—வாத அடிப்படையில் வெற்றி பெற முடியாது! எண்ணிக்கைப் பலம் ஒன்றினுல்தான் வெற்றி பெற முடியும!"

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இன்றைய சட்டசபை நிகழ்ச்சிகளை விளக்கி, அமைச்சர்களின் முரண்பட்ட வாதங்களை எடுத்துக்காட்டி, சட்டசபையில் நமது கழக உறுப்பினர்கள் தர்க்க முறையில் பிரச்சினைகளைப் பற்றிப் பேச, உரிய தகவல்களைச் சேகரித்துத் தருவதில் மக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

தி.மு.க.-சென்னை மாணவர் கிளை

தோழர்களுக்கு:

"சென்னை நகரிலுள்ள தி. மு. க.—மாணவர் கிளைகளடங்கிய கூட்டம் ஒன்று நவம்பர் மாதம் 16-ந்தேதி காலை 9-மணிக்கு நடைபெற இருக்கின்றது; கிளைக் கழகச் செயலாளர்கள், மாணவ நண்பர்கள், சென்னை நகரிலுள்ள அமைப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

"அன்று காலை தி. மு. க.—சட்டக் கல்லூரி மாணவர் கிளை அமைக்கப்பட இருக்கின்றது; சட்டக் கல்லூரியிலுள்ள தி. மு. க. மாணவர்கள் அனைவரும் தவருது வருமாறு கேட்டுக் கொள்ளப் படுகிருர்கள்.

"கூட்டத்திற்கான இடம் அடுத்து அறிவிக்கப்படும்."

அன்பன்,
டி. கே. பொன்னுவேலு
அமைப்பாளன்,
தி.மு.க.—மாநில மாணவர் கிளை

முதுகுளத்தூர்: சட்டமன்றத்தில் சத்தியவாணிமுத்து கருத்துரை

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இப்போது கைது செய்தவர்கள் ஏன் அப்போதே செய்திருக்கக்கூடாது? உண்மையிலேயே உடனுக்குடன் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அவ்விதம் செய்தால்தான் குற்றவாளிகளின்பேரில் உண்மையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறமுடியும். தேவர் அவர்கள் பேசிய பேச்சுக்களின் தேதிகள் என்ன? அந்தத் தேதிகளில் பேசிய பேச்சுகளுக்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறதென்ருல் இதன் அர்த்தம் என்ன?

"இந்த சர்க்கார் உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்குவேண்டி வேலை செய்துவருகிறது என்று சொன்னுல், அவர்களுடைய கஷ்டங்களை ஏன் முன்னுலேயே நிவர்த்தி செய்து கொடுத்திருக்கக் கூடாது? இந்த நிலைமையில், இப்போதுபோய் நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களைக் காப்பாற்றப்போகிறோம் என்று சொன்னுல் அது உண்மையிலேயே காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்குத் தேடவேண்டுமென்றுதான் இவ்விதம் போயிருக்கிறதே தவிர, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக அல்ல என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

"தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து பல மாதங்களுக்கு முன்னுலேயே பல மகஜர்கள் இந்த சர்க்காருக்கு வந்திருக்கிறது. 3—5—57-ல்—அதாவது, உப-தேர்தலுக்கு முன்னுல் முதுகுளத்தூர் சேமால சங்கத்திலிருந்து ஒரு நீண்ட மகசர் சென்னை சர்க்காருக்கு அனுப்பியிருக்கிருர்கள். அங்குசுமார் ஐம்பது கிராமங்களில் நடந்துகொண்டிருக்கிற தொந்தரவுகளை எல்லாம் திரு. தேவர் அவர்களின் பேச்சுக்களையும் வெளியிட்டு விநியோகம் செய்திருக்கிருர்கள். இதற்கெல்லாம் இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? மேலும் வேலும் என்ன வேண்டுமானுலும் செய்துகொள்ளட்டும் என்றுதானே நீங்கள் சும்மா பார்த்துக்கொண்டு இருந்தீர்கள்? இத்தனை உயிர்களும் பலியான பிறகுதான் இந்த சர்க்கார் அங்குபோயிருக்கிறது.

முதுகுளத்தூர் இங்கு இல்லை; 300 மைலுக்கு அப்பால் இருக்கிறது. இம்மன்றத்தில் இருந்துகொண்டு அழகாகப் பேசலாம். இதைவிட்டு அங்குள்ள நிலைமை சமாளிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். எவ்விதமிருந்தாலும், இனிமேலாவது அங்கு சுமூகமான நிலைமை ஏற்படுவதற்கு வழிவகைகள் செய்தாக வேண்டும். அங்கு யார் வெட்டினூர்கள்—யார் யாரைக் குத்தினூர்கள் என்ற வாதத்திற்கு நான் வரவில்லை; இனிமேல் அங்கு ஒரு சுமூகமான சூழ்நிலை வரவேண்டியது மிக அவசியம்.

"ஒரு சமுதாய மக்கள் அதிகமாக எந்தக் கிராமத்தில் இருந்தாலும், குறைவாகவுள்ள மற்ற சமுதாயத்திலுள்ள மக்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும்; ஒரு சமுதாயத்தினரின் ஆதிக்கம் மட்டும் இருக்கக் கூடாது; இதற்கு சர்க்கார் ஒழுங்கான நிர்வாகத்தை நடத்த வேண்டும். ஒரு தனி சமுதாயத்தினரின்—எந்த சமுதாயத்தினராய் இருந்தாலும் சரி, அவர்களின் ஆதிக்கத்தை வளரவிடக் கூடாது. எல்லாமக்களுக்கும் சம நிலையுடன் வாழ்வதற்கான ஒரு சுமூகமான நிலையை உண்டுபண்ணவேண்டும். ஆகவே, இப்போது அங்கே இருக்கக்கூடிய போலீஸ் படை இருக்கத்தான்வேண்டும். கலவரம் நடந்தபோது அங்கு என்னவெல்லாம் நடந்தது என்பதை நினைத்துப் பார்க்கும்போது மிகவும்வேதனையாக இருக்கின்றது. இனிமேலாவது அப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காக-தடுப்பதற்காக இன்னும் அதிகமாகப் போலீசை பாதுகாப்புக்காகவைத்திருக்க வேண்டும்.

"சர்க்காருக்கு அங்கு நடந்தவைகளைப் பற்றியெல்லாம் விசாரணை செய்ய வேண்டுமென்ற நம்பிக்கை இருக்குமானுல் நல்ல நீதி விசாரணையை ஏற்படுத்த வேண்டும். ஆனல், இந்த விசாரணையால் ஏதாவது அமைதி நிலவுமானுல்தான் இந்த விசாரணையை வரவேற்கமுடியும்; அதல்லாமல், இந்த விசாரணையால் கலவரங்கள் மேலும் வளரும்—அல்லது நீடிக்கும் என்றிருக்குமானுல், தனிப்பட்ட முறையில்—என்னைப் பொறுத்தவரையில் இந்த விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது; இது அவசியமும் இல்லை என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

"ஆகவே, சர்க்கார் இந்த மாதிரியான சுமூகமான நிலைமையைக்கொண்டு வருவதற்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்"

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரொருவர் ஒழுங்குப் பிரச்சினை போரால் 'இந்த முதுகுளத்தூர் விஷயத்தில் எதிர்க்கட்சியில் இருக்கிற நிதானக் கொள்கையுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய கனம் அங்கத்தினர் அம்மையார் அவர்கள், திரு. முத்துராமலிங்க தேவர் அவர்களை ஏன் முன்னுலேயே கைது செய்யவில்லை என்று கேட்கிருர். இத்தனைக் காரியங்கள் நடந்த பிறகும் அவரைக் கைது செய்தது தற்கு, மிகவும் தவறு—அவரை உடனே விடுதலை செய்யவேண்டு'மென்று கேட்கப்படுகிறதே—இவைகளையெல்லாம் கனம் அங்கத்தினர் அவர்கள் தெரியாமல் பேசுகிருர்களா' என்றுகேட்டார்.

இதற்கு டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள் பதில் சொல்லும்போது, "நான் இதைப்பற்றிக் குறிப்பிட்டதின் நோக்கம், முத்துராமலிங்க தேவர் அவர்கள்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது, அவர்கள் பேசிய பேச்சுக்களின் பேரில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவரை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ்தான் கைது செய்திருக்கிருர்கள். ஆகவே, சர்க்கார் தரப்பில் கூறப்படும் காரணங்களின்மேல் ஏதாவது செக்ஷன் பிரகாரம் ஏன் முன்னதாகவே கைது செய்யப்படக்கூடாது என்றுதான் கேட்டேன். அவ்விதம் கைது செய்யப்பட்டிருந்தால் அதை நான் ஏன் என்று கேட்டிருக்கமாட்டேன்; மறைமுகமாக என் கணையைத் தொடுக்கவேண்டும் என்றுதான் இப்போதும் நான் கேட்கிறேன்" என்று கூறி விளக்கப்படுத்தினுர்.

கிருத்துவக் கல்லூரி தமிழ் மன்றச் சிறப்புக் கூட்டம்

12—11—57 செவ்வாய் மாலை 5-மணிக்கு, சென்னை-கிருத்துவக் கல்லூரி (தாம்பரம்) தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் சிறப்புக் கூட்டத்தில் தோழர் க. அறிவழகன் சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.